செங்கோல்
நிறுவனர்: டாக்டர் ம.பொ.சிவஞானம்
மலர் : 42 இதழ் : 17 சித்திரை 14 26-4-92 ஞாயிறு சென்னை விலை 50 காசுகள்

ஆங்கில நர்சரி பள்ளிகளை ஒன்று விடாமல் மூடிவிடுங்கள்!

அரசு கல்விக்குழுமுன் அருட்செல்வர் நா.மாலிங்கம்சாட்சியம்

தமிழ்நாட்டில் உள்ள நர்சரி பள்ளிகளின் தரத்தை அறியவும், தமிழ் மொழியை நர்சரிப் பள்ளிகளில் நடைமுறைப் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வுசெய்யவும் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சிட்டிபாபு தலைமையில் ஒரு நிபுணர் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. அக்குழு அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களை கோவை சக்தி சுகர்ஸ் தலைமை அலுவலகத்தில் சந்தித்து அவருடைய கருத்துக்களைத் திரட்டியது அதன் விவரம்—'சக்தி சுகர்ஸ்-செய்தி மடல்' மார்ச்சு இதழில் வெளியாகியுள்ளது. அதன் முக்கிய பகுதிகளை மட்டும் கீழே தருகிறோம்

—ஆசிரியர்

'நிபுணர் குழுவினர்களே!

முதன் முதலாக தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் தமிழுக்குரிய மரியாதை சுதந்திரப் போராட்ட தியாகி உயர்திரு. டி.எஸ். அவிநாசிலிங்கம் ஐயா அவர்கள் கல்வி மந்திரியாக இருந்த போதுதான் கிடைத்தது. அவர் காலத்தில்தான் பள்ளிக்கூடங்களில் தமிழ் பயிற்சி மொழியாகியது. அதுவரை நடுத்தர—மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலே ஆங்கிலத்தில்தான் அனைத்துப்பாடங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன.

அவினாசிலிங்கம் ஐயா அவர்கள் கல்வி மந்திரியாக இருந்த காலத்தில்தான் 'இங்கிலீஷ் மீடியம்' வகுப்பில் சேர்ந்து படிப்பது என்பது மிகவும் கடினமாக்கப்பட்டது. கல்வி இயக்குநரிடம் அனுமதி வாங்கித்தான் இங்கிலீஷ் மீடியம் வகுப்புகளில் சேர்க்கும் நிலை அன்றைக்கு இருந்தது. பிறகு படிப்படியாக அந்த நிலைமை மாற்றப்பட்டு யார் வேண்டுமானாலும் இங்கிலீஷ் மீடியம் வகுப்புகளில் சேர்ந்து படிக்கும் சூழ்நிலை உருவாகியது அதற்கான அனுமதியும் சுலபமாகி விட்டது.

திரு. அவினாசிலிங்கம் ஐயா அவர்கள் காலத்தால் இருந்த அந்த சிரமமான நிலைமையே தொடர்ந்துநீடித்திருக்குமானால் இங்கிலீஷ் மீடியம் பள்ளிகள் காளான்களைப் போல தமிழ் நாட்டில் பெருகி இருக்காது.

தமிழ்நாட்டில் 1962ல் திரு. காமராஜ் முதல் அமைச்சராக இருந்த போதும் அதன் பிறகு முதல் அமைச்சராகப் பதவியேற்ற திரு. பக்தவச்சலம் அவர்கள் காலத்திலும்தான் 'நர்சரி ஸ்கூல்கள்' தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

திரு. எம் ஜி. ஆர். அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் அவருக்கு தெரிந்தோ தெரியாமலோ இந்த நர்சரி பள்ளிகளுக்கு தமிழக அரசின் ஆதரவு சற்று தாராளமாகக் கிடைக்கத் தொடங்கிவிட்டது.

சென்று முடிந்த பழைய காலத்தை இன்று நான் நினைத்துப் பார்க்கிறேன். பொள்ளாச்சித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக சட்டசபையில் பல்வேறு மசோதாக்கள் மீது நான் பேசி இருக்கிறேன், அதில் கல்வி மசோதாவும் ஒன்று.

அப்போதெல்லாம் இந்த 'நர்சரி பள்ளிகள்' இவ்வளவு அதிகமாகவும் இல்லை. மக்களின் அமோக வரவேற்பையும் அவை பெற்றிருக்கவில்லை. அதனால் தான் நர்சரி பள்ளிகளைப்பற்றி என்னைப் போன்றவர்கள் சட்டசபையில் அதிகமாக விமர்சிக்க வேண்டியகட்டாயம் அன்றைக்கு ஏற்படவில்லை

இந்த நர்சரி ஸ்கூல்கள் இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்ற நாசகரமான விளைவை அன்றைக்கே என்னைப் போன்றவர்கள் யூகித்து அறிந்திருப்போமானால் எதிர்த்து நின்று இவைகளின் வளர்ச்சியை நிச்சயம் தடுத்திருப்போம்.

1967ல் தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி மறைவுக்குப் பிறகுதான் நர்சரி பள்ளிகள் காளான்களைப் போல தலையெடுக்கத் தொடங்கின. பட்டி தொட்டிகளில் எல்லாம் பாமர மக்கள்கூட அதனை வரவேற்கவும் ஆரம்பித்தனர்.

நர்சரி பள்ளிகள் இன்றைய தினம் நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் பணம் பண்ணுகின்ற நிறுவனங்களாக உருவாகியிருக்கின்றனவே தவிர அறிவு வளர்க்கின்ற நிலையங்களாக அவைகள் அமையவில்லை

அதுமட்டுமல்ல, நர்சரி ஸ்கூல்கள் செயல்படுகின்ற இடங்களை நீங்களே சென்று பாருங்கள் அவற்றில் பல நர்சரி பள்ளிகள் சுகாதாரமற்ற இடங்களில் உள்ளன. அதன் சுற்றுப்புற சூழ்நிலையோ கல்வி வளர்ச்சிக்கு எந்த வகையிலும் பொருத்தமில்லாதவை. சில இடங்களில் சமையல் அறைகளைக் கூட நர்சரி பள்ளிகளின் வகுப்பு அறைகளாக மாற்றி இருக்கிறார்கள்.

இந்த அவசரம் எதனால் ஏற்பட்டது? ஆங்கிலத்தின் மீதுள்ள மக்களின் மோகம் சில சுயநல சக்திகளால் தொடர்ந்துபராமரிக்கப்படுகிறது. அதனால்தான் இந்த நர்சரி பள்ளிகள் ஆதாயங்களைப் பெற முடிகிறது. இதனால்தான் அவற்றை பணம் பண்ணுகின்றநிறுவனங்கள்என்று கூறுகிறேன்.

நர்சரி பள்ளிகளில் அப்படி என்ன நடக்கிறது?

அந்தக் குழந்தைகள் வீட்டில் பேசுகின்ற தாய்மொழியை அங்

(6-ம் பக்கம் பார்க்க)

செங்கோல்

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்

6-4-92] ஞாயிறு [சென்னை

பிரேமதாசரின் பிரலாபம்!

''ஈழத்து புலிப்படைத் தலைவர் திரு.பிரபாகரனையும் திரு.பொட்டு அம்மனையும் இந்திய அரசிடம் ஒப்படைக்கும்படி இலங்கை அரசை வற்புறுத்துவோம்'' என்று திருப்பதியிலிருந்து புதுடில்லி திரும்பும் வழியில் சென்னையில் செய்தியாளர்களிடம் பிரதமர் நரசிம்மராவ் கூறினார்.

இதுபற்றி இலங்கை அதிபர் பிரேமதாசா இலங்கையில் பெருவல் என்னும் நகரில் பேசியது 'தினமணி' 21—4—92 சென்னைப் பதிப்பில் வெளியானபடி வருமாறு:

''இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவின் பேட்டிக்குப் பதிலளிக்கும் வகையில் பெயர்களைக் குறிப்பிட்டு இலங்கையின் மறுப்பை பிரேமதாசா நேரடியாக வெளியிடவில்லை மாறாக, சிங்களர்பெரும்பான்மையராக இலங்கையில் உள்ளனர். அதனால், அவர்கள் மூத்த சகோதரர்கள்—அண்ணன் என்று பிரேமதாசா குறிப்பிட்டார் இலங்கையில் சிறுபான்மையினராக உள்ள தமிழர்கள் இளைய சகோதரர்கள்—தம்பிகள்'' என்றார்.

''ஒரு வீட்டில் உள்ள தம்பி சில நேரங்களில் தவறுகள் செய்யலாம். அப்படித் தவறுகள் செய்கிறான் என்ற காரணத்துக்காக, அவனைத் திருத்தவேண்டும் என்பதற்காக, அடுத்த வீட்டுக்காரனிடம் அண்ணன் ஒப்படைக்க மாட்டான்.

''அதுபோல, சிறுபான்மை இனத்தவரான தமிழர்களைப் பொறுத்தமட்டில் தம்பியைப்போல, பெரும்பான்மை இனத்தவரான சிங்களர் நடத்தவேண்டும்''

பிரபாகரன்தான் இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் கொலைக்கு காரணமானவர் என்று இந்திய அரசு பிரகடனப்படுத்தவில்லை. அது, விசாரணைக்குப் பிறகு நீதிமன்றம் எடுக்க வேண்டிய முடிவு.

திரு.பிரபாகரனை இந்திய அரசிடம் ஒப்படைக்க பாரதப் பிரதமர் கோருவது தூக்குமேடையில் நிறுத்த அல்ல; நீதிமன்றத்தில் குற்றவாக் கூண்டில் நிறுத்தி விசாரணை நடத்தத்தான்!

முன்னொரு சமயம் ஈழத்துப் புலிப்படையைச் சார்ந்த திரு.குண்டுமணி என்பவர் இந்தியாவில் அடைக்கலம்புகுந்த போது, இலங்கை அரசு கேட்டுக் கொண்டபடி அவரை ஒப்படைத்தது தமிழகத்தில் இயங்கிய தி.மு.க. அரசு. பின்னர், அவர் சிறையில் வைத்தே கொல்லப்பட்டார் என்பதை பிரேமதாசா மறந்துவிட்டார். ஆம்; சுடப்பட்டவர் தமிழர்—அதாவது, தம்பி! சுட்டுக்கொன்றதுசிங்கள அரசு—அதாவது, அண்ணன்!

அந்தமாதிரி இந்தியாவில் பிரபாகரனைநடத்தமுடியாது. பிரபாகரனும் பிரேமதாசாவும் தம்பியும் அண்ணனுமானாலும், தாய் வேறுவேறுதான்! ஆம்; பங்காளிகள்! ஆனால், இந்தியத் தமிழரும் ஈழத்தமிழரும் ஒரே தாய் வயிற்றின் பிள்ளைகள். அதாவது, இரத்தத்தின் ரத்தம்!

ஆகவே, திரு பிரபாகரனை இலங்கையரசு இந்திய அரசிடம் ஒப்படைத்த பின்னரும், சிறையில் கௌரவமாக நடத்தப்படுவார் அவருக்கு ஜாமீனில் வெளிவரவும் சந்தர்ப்பமுண்டு. நீதிமன்றத்தில் வக்கீலை வைத்து எதிர் வழக்காடவும் செய்யலாம். அவராக வக்கீல் வைக்கவில்லையென்றாலும் அரசின் செலவில் வக்கில் அமர்த்தவும் சந்தர்ப்பமுண்டு; சட்டமுண்டு!

நீதிமன்றமும் நடுவு நிலையில் நின்று தீர்ப்பளிக்க சட்டம் கைகொடுக்கும். இது, இலங்கை யல்ல; இந்தியா!

அதிபர் பிரேமதாசா, பிரபாகரனை மட்டுமேயன்றி, ஈழத்தமிழர் அனைவரையுமே தம்பிகளாக ஏற்று அவர் மிக உயர்ந்த அண்ணன் பீடத்தில் நின்று இந்தியாவுக்குக் காட்சியளிக்கிறார்!

யார் இந்த பிரேமதாசா? வடமராச்சியில் இலங்கை இராணுவத்தால் ஈழத்தமிழர் முற்றுகை யிடப்பட்டு பலநாட்கள் பட்டினிபோடப்பட்டபோது, இதே பிரேமதாசாதான் இலங்கையின் பிரதமர்!

பட்டினிகிடக்கும் தமிழருக்கு ரெட்கிராஸ் சொசைட்டி மூலம் படகில் உணவுப்பொருள் அனுப்ப இந்திய அரசு முன்வந்தபோது, அதனை ஏற்கமறுத்தார் பிரேமதாசாவிமானத்தில் அனுப்புவோம்என்று பாரதப் பேரரசு கூறியபோது,'உங்கள் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவோம்! என்று கூறியவர்தான்! அதே பிரேமதாசாதான் இப்போது பிரபாகரனை மட்டுமின்றி தமிழரெல்லாமே எங்கள் தம்பியர்; சிங்களராகிய நாங்கள் அண்ணன்மார்—என்று உறவுகொண்டாடுகிறார்.

ஆதிகபுத்தி போகாததால் தமிழரும் சிங்களரும் உடன்பிறப்புகள்—ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்று சமநிலையில் வைத்துப் பேசாமல், ஆளுஞ்சாதி என்ற ஆணவத்தில் 'அண்ணன்'—'தம்பி' என்று உயர்த்தியும் தாழ்த்தியும் கூறுகிறார். ஒருகால், தமிழில் சமநிலையில் வைத்துச் சொல்ல உடன்பிறப்பு என்ற சொல்லிருப்பதுபோல, சிங்கள மொழியில் இல்லைபோலும்!

அண்ணன் ஆளுகிறபோது தம்பிகள் வாழும் ஈழத்தில் என்ன நடக்கிறது?

விமானத்திலிருந்து ஈழத் தமிழர்—ஆம்; தம்பிகள்—மீது குண்டுமாரி மொழிகிறது சிங்கள ராணுவம்!

ஈழத்திலே, புலிப்படை தோன்றியது எப்போது?எதனால்? என்பதை விளக்கி, திரு. பிரபாகரன் கூட்டத்தார்போட்டுள்ள பிரசுரங்களிலே,ஈழத்தமிழ்ப்பெண்களசிங்கள ராணுவத்தார் கற்பழித்தனர் குழந்தைகளைக் கொன்றனர்—என்றெல்லாம் தகவல் தந்திருப்பதோடு, அந்த அநீதிகளைக்காட்டும் புகைப்படங்களையும் அந்தப் பிரசுரங்களிலே சேர்த்திருந்தனர். இதுதான் அண்ணன்—தம்பி உறவோ? தம்பியரின் மனைவியரை அண்ணன்மார் கற்பழிப்பரோ?

சிங்களர் துச்சாதனர் கூட்டமோ? ஈழத்தமிழர் திரௌபதையோபாள பாண்டவரோ?

திருப்பதியில் கூடிய காங்கிரசிலே, ''இந்தியாவில் ஈழத்துப் புலிப்படைமீது தடைவிதிக்கவேண்டும்'' என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது.

''அதனால் எங்களுக்கு ஒரு நல்லபயனும் ஏற்படாது'' என்று இலங்கை அரசு தரப்பில் அபிப்பிராயம் கூறப்பட்டிருக்கிறது.

புலிப்படைமீது இந்திய அரசு தடைவிதிக்க வேண்டுமென்பது இந்தியாவில்சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கத்தான்!

இலங்கையில் தம்பியர் கூட்டமான தமிழர்மீது அண்ணன்மார் கூட்டமான சிங்களரின் அரசு ஆதிக்கம் செலுத்துகிறதே அதற்கு உதவபுரிய அல்ல; அல்லவே அல்ல!

(4ம் பக்கம் பார்க்க)

பயங்கர வாதமும் காந்தி சகாப்தமும்

(ம. பொ. சிவஞானம்)

5

''சென்னை மாகாணத்தில் பயங்கர இயக்கம் பிறக்கும் போதே உயிரற்ற பிண்டமாகப் பிறந்தது'' என்று பாரதியார் தமது 'இந்தியா'வார இதழில் எழுதினாரென்றாலும், ஆங்கிலேயராட்சி தற்கொலையால் மாண்ட வீரன் வாஞ்சிநாதனின் பின்னால் ஒரு மாபெரும் புரட்சிப்படை இருப்பதாக முடிவெடுத்து அதனை ஒழித்துக்கட்ட அடக்குமுறையில் இறங்கியது. இதனை புராண பாஷையில் ஒரு 'யாகம்' என்றே பாரதியார் வருணிக்கிறார் இதோ, அவரது வருணனை:

'ஆஷ் கொலையும் வாஞ்சி ஐயரின் தற்கொலையும் இம்மாகாணத்தின் பொதுவாழ்வில் துரதிர்ஷ்டமானவழியில் பலனளிக்க ஆரம்பித்தது. அதிகாரிகள், கிழக்கத்திய சம்பிரதாயப்படி இதற்கு வஞ்சகமாக ஒருபெரிய யாகமே நடத்திவிடத் தீர்மானித்தார்கள்.

''போலீசார்—இந்திய போலீசார்—இந்த யாகத்தை இன்னும் பிரமாதமாக்கி விட்டார்கள் இன்னும் இதற்காகச் செலவான பணம் வலை வீசப்பட்ட பிரதேசம், இன்னும் இவைபோன்ற விவரங்களைக் கவனிக்கையில் இந்து யாகங்களின் சரித்திரத்திலே ஒரு பிரதமயாகமாகி விட்டது''

பாரதியார்'கிழக்கத்திய சம்பிரதாயப்படி'என்று கூறுவது இந்துக்களின் புராணங்களில் வரும் தேவாசுரப் போரில் தேவர்களுக்கு எதிராக அசுரர்களும், அசுரர்களுக்கு எதிராக தேவர்களும் நடத்தியதாகச் சொல்லப்படும் யாகங்களையேயாகும்.

தேவர்களின் யாகங்களை அசுரர்கள் அழிப்பதும், அசுரர்களின் யாகங்களை திருமாலின் துணைகொண்டு தேவர்கள் அழிப்பதும் புராணங்களில் வரும் போர்களாகும். இது, ''தேவாசுரப் போர்'' என்று பெயர்பெற்று விட்டது

தக்கன் நடத்திய வேள்வியை சிவபெருமான் அழித்தது ''தக்க யாகப்பரணி'' என்னும் பெயரில் மகாகவி ஒட்டக்கூத்தரால் ஒரு இலக்கியமாகி விட்டது தமிழிலே!

இராமாயணத்திலே, தலைமறைவாகி இந்திரஜித்தன் நடத்திய நிகும்பலை யாகம் நிறைவேறியிருந்தால் இராம—இராவணப் போரில் வெற்றி திசைமாறியிருக்கக் கூடும். வீடணன் உளவு சொன்னதால், நிகும்பலை யாகம் அழிக்கப்பட்டுவிட்டது!

ஆஷ் கொலைக்கு முன்பே பிரிட்டிஷ் அரசு தமிழ்நாட்டில் கடுமையான ஒரு யாகத்தை தேசபக்தர்களுக்கு எதிராக நடத்தியது, அது, வ உ.சிதம்பரனார் சிறைபட்ட நாளிலே நெல்லை நகரில் நடந்த கலவரத்தை யொட்டி அரசு உருவாக்கிய 'திருநெல்வேலி சதிவழக்கா'கும். அதிலே பலர் ஆண்டுக்கணக்கில் சிறைத் தண்டனை பெற்றனர்.

ஆஷ் கொலை சதிவழக்கானது, பயங்கரவாதிகளை அரக்கர்களாகக் கருதி பிரிட்டிஷ் ஆட்சி நடத்திய வேள்வியாகும். அது, 'ஆஷ் கொலை வழக்கு, எனப் பெயர் பெற்றது. ஆம்: தேச விசுவாசிகளான பயங்கரவாதிகளும், அவர்களுக்குப் பகைவர்களான பிரிட்டிஷ் ராச விசுவாசிகளும் பரஸ்பரம் அரக்கர்களாகவே கருதிப் போராடினர். இருதரப்பின் நடவடிக்கைகளுமே அரக்கத்தனமாகப்படுகிறது ஆன்மஞானியான பாரதியாருக்கு ஆனால், கிழக்கத்திய பாணியில் பிரிட்டிஷ் அரசு மக்களுக்கு தீமைதரத்தக்க யாகத்தை நடத்தியது என்கிறார்.

இதனால், தேச விசுவாசிகளின் பயங்கர இயக்கத்தையும் அரச விசுவாசிகளின் அடக்குமுறையையும் பாரதியார் ஒன்றாகவே கருதியது புலனாகும்.

தமிழ் நாட்டில் நிகழ்ந்த பயங்கரவாதத்தை மட்டுமே நாம் எடுத்துக் கொண்டோமானாலும், அதே காலத்தில் வடபுலத்தில்—குறிப்பாக, மகாராஷ்டிரபுரம்—பஞ்சாப்—வங்காளம் ஆகிய மாநிலங்களில் பயங்கரவாதிகளும் அரசினரும் நடத்திய போர் தேவாசுர யுத்தத்தை விடவும் கொடியதாக இருந்தது.

பொதுவாக, நாடு முழுவதிலுமே பயங்கர இயக்கம் பரவியிருந்ததால், லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அரசு 'நீதி'என்னும் போலிப் பெயரால் ஒரு யாகத்தை நடத்த முடிவெடுத்து, அதை நடத்தும் வழிவகைகளைக்கூற நீதிபதி ரௌலட் என்னும் வெள்ளையர் தலைமையில் ஒரு கமிஷன் நியமித்ததை முன்பே அறிந்தோம்.

அந்தக் கமிஷன் முயன்று, பல சாட்சியங்களை விசாரிப்பதாக நாடகம் நடத்தி, தாம் விரும்பும் வகையில் ஆவணங்களைத்திரட்டி பின்னர் ஒரு அறிக்கையைத் தயாரித்தளித்தது.

அந்த அறிக்கையிலே, தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் சிதம்பரனார் நடத்திய சுதேசிக் கிளர்ச்சிக்கும் மணியாச்சியில் செங்கோட்டை வாஞ்சிநாதன் கலெக்டர் ஆஷைக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டு மாண்டதற்கும் வங்கவாசிகளான சுவாமி விவேகானந்தரும், விபின சந்திரபாலரும் சென்னை மாகாணத்தில் சுற்றுலாச் செய்து நடத்திய பிரசாரத்தின் தீயவிளைவுகளாகும் என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தது.

சுவாமி விவேகானந்தர் துவராடை யணிந்த துறவியாயினும், தாம் செல்லுமிடந்தோறும் தேசபக்தியை மக்களுக்கு போதித்து வந்தது உண்மைதான், ஆனால், அவர் நேரடியாக பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் அரசியல்வாதி போல் எங்கும் எந்த நிகழ்ச்சியிலும் பேசியதாகத் தெரியவில்லை. ஆயினும் வங்கத்தில் வீசிய புரட்சிப் புயல் ஆட்சியாளர் விவேகானந்தரையும் ஐயுறச் செய்தது, மற்று, விவேகானந்தரின் சகோதரர் சுவாமி பூபேந்திரநாதத் தத் என்பவரை அரசு சிறையில் தள்ளியது. ரௌலட் குழுவின் அறிக்கைபெருமளவு பக்கங்களில் வங்க மாநிலத்தையே புரட்சிக்களமாக வருணித்தது,

பாரதியார் பூபேந்திரர் பற்றிப் புனைந்த செய்யுட்கள் நான்கில் ஒன்று வருமாறு:

இன்னாத் பிறர்க் கெண்ணான் பாரதநாட்
  டிற்கிரங்கி இதயம் நைவான்
ஒன்னாரென் றெவருமிலான் உலகனைத்தும்
  ஒருயிரென் றுணர்ந்த ஞானி
அன்னானைச் சிறைப்படுத்தார் மேலோர்தம்
  பெருமை யெதும் அறிகி லாதார்
முன்னாளில் துன்பின்றி இன்பம்வாரா
  தெனப் பெரியோர் மொழிந்தா ரன்றே!

இந்தியாவில் தேசபக்தியுடைய பயங்கரவாதிகள் வெள்ளையர்களைமட்டுமே கொலைபுரிந்தனர். அவர்களிலும் ஆண்களை-உயர் அதிகாரிகளை—மட்டுமே பழிதீர்த்தனர் இந்திய அரசியல் தலைவர்களும் பத்திரிகைகளும் தங்கள் செயலைக் கண்டித்ததற்காக அவர்களைக்கொன்றுபழிதீர்க்க பயங்கரவாதிகளில் எவரும்முயலவில்லை. இது, இந்நாளில் இந்தியாவின் வடக்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் தோன்றியுள்ள பயங்கர வாதிகளுக்குப் பாடமாகும், தேசத்தலைவர்கள் தேசபக்தியின் பெயரால் கொலைச்செயல் புரிந்தவர்களைக் கண்டித்ததற்கு இன்னும் சிலநிகழ்ச்சிகளை அறிவிக்க முயலுவோம்.

(4ம் பக்கம் பார்க்க)

பயங்கரவாதமும் காந்தி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

1908 ஏப்ரலில் வடக்கே முஜபர்பூர் மாவட்ட நீதிபதியான கிங்ஸ்போர்டு என்னும்ஆங்கிலேயர்மீது மறைந்திருந்துபயங்கரவாதியொருவர் வீசியகுண்டானது குறிதவறி கென்னடி மாதிருவர்மீது விழுந்ததால் அவர்கள் பலியாகிவிட்டனர். பெண் கொலை பாவம்!

களவு பண்டைநாளில் கொலைக் குற்றத்தினும் கொடியதாகக் கருதப்பட்டு மன்னர் பெருமக்களால் மரணதண்டனை விதிக்கப்பட்டது. அப்படித்தான் கோவலனை தவறாக கள்வன் என்றுகருதி மரணதண்டனை விதித்தான் பாண்டிவேந்தன் நெடுஞ்செழியன்.

சங்க காலத்தில் அரசுக்குரிய தோட்டத்திலிருந்து விழுந்து ஆற்றுநீரில் மிதந்து சென்ற மாங்கனியை அப்பாவிப் பெண்ணொருத்தி எடுத்துப் புசித்துவிட்டாள்.

அதற்காக, நன்னன் என்னும் மன்னன் அவளுக்கு மரணதண்டனை கொடுத்தான். ஆனால், அதை தண்டனையாகக் கருதாமல் கொலைக்குற்றமாகக்கருதி, புலவர்கள் அந்த மன்னனை பாடுவதில்லை என்று விரதமெடுத்தனர். களவு குற்றத்தைச் செய்தது பெண்ணானால் அவள் மரண தண்டனைக்குரியவள் அல்லள் என்பது தமிழர் கொள்கை.

இந்திய விடுதலைக்கு தங்களுக்கென தனிவழி வகுத்துக்கொண்டு பயங்கரவாதிகள் போராடியபோது, அவர்களிலே பெண்கள் கொலைச் செயல் புரிந்ததாகச் செய்தியில்லை. ஏன், ஆண்களே கூட பெண்கொலையி லீடுபடத் துணியவில்லை.

முஜபர்பூரில் கென்னடி மாதர் கொலையானபோது அந்த ஆண்டில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் தலைமை தாங்கிய பண்டித மதன் மோகன் மாளவியா பயங்கரவாதிகளை வன்மையாகக் கண்டித்தார், தமது தலைமையுரையிலேயே! அந்த மகாசபையில் கென்னடி மாதர் கொலையைக் கண்டித்தும் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கென்னடி மாதர் கொலைபற்றிப் பாரதியார் தமது 'இந்தியா' வார இதழில் எழுதியதாவது:

''ஐயோ பாவம்! என்ன காரியம் செய்தனர்? என்ன தவறு? என்ன தவறு? ஒருபெண்மீது வெடிகுண்டு வீசி இந்தியாவிற்கு விடுதலையா! இவ்வளவிற்கும் பெண் என்றால் எந்த சாதியினராலும், தேசத்தாரானாலும், வருணத்தாரானாலும் சரி; உலக மாதாவான ஆதிசக்தியின்—தெய்வீகப் பெண்மணியின் நேரடியான அம்சமே அவள் என்பதல்லவா, இந்தியர் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துபோன வேதாந்தம்! உடனே கவனியுங்கள்! ஆரம்பத்திலேயே சகுனம் நன்றாயில்லை. இந்நாட்டில் இவ்வியக்கம் வளராது''

கென்னடி மாதர் கொலை நிகழ்ச்சிதான் இந்தியாவில் நிகழ்ந்த முதல் அரசியல் கொலை. ஆம்; லண்டனில் மதன்லால் திங்கரா சர் கர்சான் வில்லியைக் கொன்றதற்கும் தமிழ்நாட்டில் ஆஷ்துரையை வாஞ்சிநாதன் கொன்றதற்கும் முன்னரே நடந்தது கென்னடி மாதர் கொலை. அதுவும் குறிதவறி நிகழ்ந்ததாகும்.

நீதிபதி ரௌலட் குழு, 'ரௌலட் சட்டம்—1' 'ரௌலட் சட்டம்—2' எனஇருவேறு சட்டங்களைத் தயாரித்து அரசுக்குப் பரிந்துரைத்தது. அந்தச் சட்டங்கள் நடைமுறைக்குவந்தால் வன்முறைப் புரட்சி மட்டுமன்றி, அரசவிரோத நடவடிக்கைகளும் வேரும் வேரடி மண்ணுமில்லாமல் வீழ்ந்தொழியும் என்றும் குழு உறுதி கூறியிருந்தது.

ரௌலட் குழுவின் பரிந்துரையில் 1908ல் நடந்த நெல்லை கலவரம் பற்றியும், 1911ல் மணியாச்சியில் நடந்த ஆஷ் கொலைபற்றியும் விரிவாகக் கூறப்படுகிறது

நெல்லைக் கலவரத்தின்போது அந்த நகரில் 3 நாட்கள் வரை அரசாங்கமே இல்லையென்று சற்று மிகைப்பட வருணித்திருந்தது. ஆம்; அடக்கு முறைக்கு தூபமிடும் குறிக்கோளுடன்!

ரௌலட் சட்டங்கள் செய்தித்தாள்களில்வெளியானதும், நாடே நடுங்கியது. அதில் அங்கம் வகித்த தமிழ் நாட்டவரான நீதிபதி குமாரசாமி சாஸ்திரியாரை மக்கள் 'ரௌலட் சாஸ்திரி!' என்று கேலியாக அழைத்தனர்.

இனி, காந்தியத்திடம் அடைக்கலம் புகுவோம். ஆம்; தீமையிலிருந்து பிறந்த நன்மைபோல, ரௌலட்சட்டங்களின் தோற்றத் தால்தான் காந்தியக் கதிரவன் அடிவானத்தில் தோன்றினான்.

(தொடரும்)

பிரேமதாசாவின் பிரலாபம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தில் புலிப்படையினருக்கும்—ஆம்; தம்பியர் கூட்டத்தார்-அண்ணன்மாரான சிங்களரின் ராணுவத்தாருக்கும் மோதல் ஏற்பட்டது 1983ல்! அதன்பின், ஆண்டுகள் பத்து பறந்தோடிவிட்டன! இந்த பத்தாண்டுகளாக இலங்கை அரசு—மன்னியுங்கள்—அண்ணன்மார் அரசு தம்பியரை வெற்றிகண்ட துண்டா?

ஈழத்தில் அண்ணன்மார் நடமாட முடியவில்லையே! நடமாடினால், துப்பாக்கியுடன்தானே! பீரங்கிவண்டிமூலந்தானே! இதுவா, அண்ணன்—தம்பி உறவு?

பிரேமதாசா, இந்தியாவைக் காட்டி பயமுறுத்தி புலிப்படையின் தலைவரை தன்வசப்படுத்த முயல்கிறார். தம்பி புத்திசாலி! அவன் உடன்பிறப்புக்கே பெப்பேசொன்னவன்! பங்காளியிடமா பணியப்போகிறான்! பணியட்டும் தொல்லைவிட்டது! ஈழத்தமிழரையோ, அவர்களிலிருந்து தோன்றிய புலிப்படையினரையோ பழிவாங்கும் எண்ணம் இந்தியத் தமிழருக்கு இல்லை. போதுமா, பிரேமதாசரே!

புலிப்படைக்குத் தடைவிதிக்காமலே, அதன் பயங்கரச் செயல்களை ஒடுக்கிவிட இந்திய அரசால் முடியும், ஒடுக்கியும் விட்டது! பிரபாகரனை கொண்டு வராமலே, அவரையும் குற்றவாளிப் பட்டியலில் சேர்த்தோ சேர்க்காமலோ, ராஜிவ் கொலைக்குக் காரணமானவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த முடியும்!

புலியும் ஆடும் ஒருதுறையில் தண்ணீர் குடித்தது கதையில் வரலாம்! காட்சி தந்தாலும் இந்தியா நடுங்கிவிடாது பிரேமதாசரே!

பாகிஸ்தான் பகைநாடாகி, மும்முறை படையெடுத்து மூக்குடைபட்டது!

ஜனவெள்ளத்தைக் கொண்ட சீனநாடு படை நடத்திப் பார்த்து வெற்றிகாண முடியாது மக்கள் வாழாத வெற்றிடத்தை காரிடார் ஆக்கித் திரும்பிப் போய்விட்டது!

காந்தியடிகள் கொலையால் இந்திரா காந்திகொலையால் பாரதப் பெருநாடு அழிந்து போகவில்லை அதுபோல,ராஜிவ் கொலைக்குப் பின்னும் 'நரசிம்மம்' நாட்டைக் காத்து வருகிறது! அதனை புலி வெல்லாது!

அதிபர் பிரேமதாசரே! புலிப்படையினர் நிலை எதுவானாலும் ஈழத்தமிழர் எங்கள் உடன்பிறப்புகள்! ஆம்; இரத்தத்தின் இரத்தம்! தமிழ் மொழி சைவ சமயம் உள்ளவரை நிலைக்கும்—நீடிக்கும்!

இந்திய அரசு, தனி ஈழநாட்டை ஆதரித்துவிட்டால், அப்புறம் தம்பியர் யார் பக்கம்? வங்கதேசம் தோன்றிய வரலாற்றை அதிபர் பிரேமதாசர் மறக்க வேண்டாம்!

ஐயாவின் சிலப்பதிகாரத் தொண்டுக்குப் பொன் விழா

[பேராசிரியர் தி. வ. மெய்கண்டார்]

6 .

'பூம்புகார்' என்னும் பெயர் பண்டைய சோழ நாட்டின் தலைநகருக்குரியதாகும். இதை சிலப்பதிகாரக்கதை நிகழ்ந்தபின், கல்கொண்டு விட்டதாக 'மணிமேகலை'யில் சாத்தனார் கூறுகிறார்.

இதற்கு காவிரிப்பூம் பட்டினம் என்றொரு பெயரும் உண்டு. அது சோழர் பேரரசில் ஆசியாவின் மிகச்சிறந்த துறைமுக நகரமாகவும் இருந்தது இந்தப் பெயரைக் கொண்ட சிற்றூரொன்று தஞ்சை மாவட்டத்திலுள்ளது. அதனால், இந்தப் பெயர்மட்டும் வழக்கிலுள்ளது.

மறைந்துபோன 'பூம்புகார்' என்னும்பெயர் ஐயா ம. பொ.சி. சிலப்பதிகாரபிரசாரத்திலிடுபட்ட பின்னர் புத்துயிர் பெறலானது. 'பூம்புகார்' என்னும் பெயரில் 1964ம் ஆண்டின் பின்பாதியில் திரைப்பட மொன்றை மேகலா பிக்சர்சார் எடுத்துத் திரையிட்டனர்.

இதற்குக் கதை-வசனம் எழுதியவர் கலைஞர் மு.கருணாநிதியாவார். படம் திரையிடப்பட்ட நாளன்று காலை ஒரு சினிமா தியேட்டரில் பத்திரிகையாளருக்காக போட்டுக் காட்டப்பட்டது அப்போது ஐயாவின் தமிழரசுக் கழகத்திற்கும்கலைஞரின்தி.மு.க.விற்கும் நல்ல உறவிருக்கவில்லை. பகையும் நிலவியதென்லாம்

அப்படியிருந்தும் சிலம்புச்செல்வரின் ஆசியைப் பெறுவது படத்தின் வெற்றிக்குப் பயன்படுமென்று கலைஞர் கருதி அவரையும் நிகழ்ச்சிக்கழைத்தார். சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்புவதொன்றே ஐயாவின் குறிக்கோளாதலால், அதற்காக தி.மு.க. கலைஞருக்கும் கைகொடுத்துதவ விரும்பி, நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்.

சிலப்பதிகாரக் கதையைச் சில இடங்களில் திருத்தியும், புதிதாக சிலவற்றைச் சேர்த்தும் கலைஞர் படமெடுத்திருந்தார். 'குறைகள் சில உண்டு. ஆயினும் குற்றமில்லையாதலால், 'படத்திற்கு எனது பாராட்டு'' என்று ஐயா பேசினார். அவரது பேச்சு நாளிதழ்களிலெல்லாம் பிரசுரமானது

வார ஏடுகளிரண்டு 'சிலம்புச் செல்வர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சிவஞானமா, கருணாநிதி எடுத்த கண்ணகி படத்தைப் பாராட்டுவது?' என்றுகுறைகூறி எழுதின. அதற்கு சிலப்புச் செல்வர் தந்த பதில் வருமாறு:

''பூம்புகார்' படத்தை எனக்குள்ள இனப்பற்று-மொழிப்பற்று காரணமாக வாழ்த்தி வரவேற்றுப் பேசினேன் குறைகளையும் கதாசிரியர் கலைஞரின் காதுகள் கேட்க எடுத்துக் கூறி, 'குற்றங்கள் இல்லாத படம்' என்று கூறினேன்.

'எனக்குள்ள மொழிப்பற்றை—இனப்பற்றை மறந்து தங்களுக்குள்ள கட்சி வழிப்பட்ட விருப்பு-வெறுப்பை மட்டுமே கண்ணாடியாகக் கொண்டு பூம்புகார் படத்தைப் பார்த்து விட்டு என்னைக் குறை கூறுவதா?

''முதல் நூலிலிருந்து மாறுபட்டு வழிநூல்—சார்பு நூல் செய்ய தமிழ் இலக்கணம் அனுமதிக்கிறது கம்ப ராமாயணம் வால்மீகியின் கதைப் போக்கிலிருந்து மாறுபடவில்லையா? கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை நாடகம் பெரிய புராணத்திலுள்ள நந்தன் கதையிலிருந்து மாறுபடவில்லையா? போகட்டும் மு க வின் 'பூம்புகாரை' மக்கள் மறக்குமளவுக்கு இளங்கோவின் சிலப்பதிகாரக் கதையை நாட்டில் இனியும் பரப்பநானிருக்கிறேன். புலவர்கள் பயப்படவேண்டாம்'

('செங்கோல் 1—11—64)

மேகலா பிக்சர்சாருக்கு முன்பே திரு சோமு அவர்களின் ஜுபிடர் பிக்சர்சார் 'கண்ணகி' என்னும் பெயரில் படமெடுத்துத் திரையிட்டனர் அதிலே, திரு பி.யூ. சின்னப்பா கோவலனாகவும் திருமதி கண்ணாம்பாள் கண்ணகியாகவும் திருமதி கே பி சுந்தராம்பாள் சமணத் துறவியான கவுந்தியடிகளாகவும் நடித்திருந்தனர். படம் வெற்றிகரமாக ஓடியது. அதனாற்றான், ஐயாவின் ஆசீர்வாதத்தை நாடினார்கலைஞர்என ஒன்றிரு நாளேடுகள் விமர்சனம் எழுதின.

ஐயா அவர்களும் தமது 'செங்கோல்' 27-9-64 இதழில் விமர்சனம் எழுதினார். அதிலும் கள்ளங்கபடமின்றிப் பாராட்டியிருந்தார்.

பரத நாட்டிய பேராசான் திரு. கே.என். தண்டாயுதபாணிப் பிள்ளையவர்கள், சிலப்பதிகாரம் என்னும் பெயரிலேயே நடன நாடகமொன்றைத் தயாரித்து 14-10-61ல் மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபாவில் தமது நாட்டிய கலா நிலையத்தின் சார்பில் நடத்திக் காட்டினார் இதில் நடித்தவர்கள் அவ்வளவு பேரும் பெண்கள் பெருஞ் செலவுசெய்து அழகிய சீன்களுடன் நாடகத்தை நடத்திக் காட்டினார்.

சிலப்பதிகாரக், கதையிலுள்ள இசைப் பாடல்கள் அவ்வளவையும் பயன்படுத்தியிருந்தார் இது ம. பொ. சி.க்கு மிகவும் பிடித்திருந்து, நாடகத்தைத் தயாரிக்கு முன்னர், ஒவ்வொரு விஷயத்திலும் ஐயாவின் ஆலோசனைகளைப் பெற்றார் திரு தண்டாயுதபாணிப் பிள்ளை.

இந்த நாடகத்திற்கு தியேட்டர் கொள்ளாத அளவுக்கு ரசிகர்கள் திரண்டிருந்தனர். அவர்களில் திரைப்பட நடிகர்களும் இசைப்பாடகர்களும் நாடகக் கலைஞர்களும் கூட இருந்தன . நாடகத்தின் நடுவே ஐயா மேடையேறிப் பேசி, நடன ஆசிரியரையும் நடிகைகளையும் மனமாரப் பாராட்டிப் பேசினார்.

இந்த நாட்டிய நாடகம் பற்றித் தமது 'செங்கோல்' இதழில் 2 பக்க அளவில் விமர்சனமும் எழுதியிருந்தார்.

மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நாளேடான 'தீக்கதிர்' ஆசிரியர் திரு கே.முத்தையாவு அவரது மனைவி திருமதி யமுனாவும் தம்முடைய சிறுமியரான மல்லிகாவையும் லலிதாவையும் கொண்டு இசைக் கதையாக 28-11-64ல் சென்னை கலைவாணர் அரங்கில் நிகழ்ச்சியை அமைத்து ஐயாவைத் தலைமை தாங்கச் செய்தனர். அவர் தலைமை யேற்று நிகழ்ச்சிக்கிடையில் செல்வியிருவரையும் பாராட்டிப் பேசினார்.

இப்படி, நாடக-நடன-திரைப்படக் கலைஞர்களைத் தூண்டியும், அவர்களாக முயன்றுசெயல் பட்டபோது அவர்களுக்குக் கைகொடுத்தும், சிலப்பதிகாரத்தின் செந்நெறிகளைத் தமிழர்களிடையே பரப்ப சரியாக ஐம்பதாண்டு காலம் ஐயா ம. பொ. சி. அவர்கள் அருப்பாடு பட்டு வந்தார்

இப்படி அரசியல் மேடைகளிலும் நாடக-திரைப்பட-இசை அரங்குகளிலும் சிலப்பதிகாரத்திற்கு ஐயா புகழ்தேடியது போல் வேறெந்த காப்பியத்திற்கும் அரசியல் தலைவர்களில் எவரும் தொண்டாற்றியதில்லை எனலாம். அரசியல் வாதிகளென்ன, பெருப்புலவர்களிலெவரும் கூடச் சாதித்ததில்லை.

இனி, இந்தியில் சிலப்பதிகாரத்தைப் படமெடுத்து, டில்லி தொலைக்காட்சி வாயிலாக பாரதப் பெருநாடெங்கணும் சிலப்பதிகாரக் கதையைப் பரப்பவும் ஐயா மேற்கொண்ட முயற்சிகளை பின்னர் அறிவோம்

திரைப்பட, நாடகக் கலைஞர்களையன்றி, பாரதியின் வாரிசாக வாழ்ந்த கவிஞர்களையும் தூண்டி இளங்கோமீது கவிபுனையச்செய்து, அவற்றைத் தமது செங்கோல்' இதழில் வெளியிட்டு சிலப்பதிகாரத்தின் புகழை ம. பொ. சி. பரப்பினார். அவர்

(6ம் பக்கம் பார்க்க)

ஐயாவின் சிலப்பதிகாரத்

கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதி, கு சா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோராவர் இவர்களில் முதலிருவர் புனைந்தகவிதைகள் அவர்களின் இதர கவிதைகளைக் கொண்ட தொகுப்பு நூற்களில் காணலாம் மற்றிருவர் கவிதைகள் 'செங்கோல்' இதழ்களில் பதிந்து விட்டன.

இசைபாடும் கலைஞர்களையும் பயன்படுத்தி கண்ணகியின் புகழ் பாடச்செய்தார் அவர்களில் அருட்பா அரசி குருவாயூர் பொன்னம்மாள் முக்கியமானவராவர். தமிழரசுக் கழகசார்பில் முதல் முதலில் இளங்கோ விழாவைக் கொண்டாடியபோது, சிலப்பதிகாரத்திலுள்ள கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, குறைக் குரவை, வாழ்த்துக் காதை ஆகிய பாடல்களைக் கொண்டு ஒருமணிநேர அளவுக்கு தனியாக பாட்டுக் கச்சேரி அமைக்க ஔவை சண்முகமும் கு சா கிருஷ்ணமூர்த்தியும் ஐயாவுக்கு உதவி புரிந்தனர். ஆம்; அவர்கள்தான் இசையமைத்தனர்

இளங்கோவடிகளை சமணரென்பர் சிலர்; சைவரென்பர் சாமிநாத ஐயருள்ளிட்ட புலவர்கள். ஆனால், சிலம்புச் செல்வர் சிலம்பிசைத்த சேர முனி எம் மதமும் சம்மதம் என்ற கொள்கை வழி சிலம்பை சர்வசமயங்களுக்கும் சொந்தமானதாக்கினார் என்கிறார்.

ஆயினும், சமணரே என்னும் கொள்கையை உறுதிப்படுத்தி சமண சமயப் பிரசாரகரான திரு ஸ்ரீபால் எழுதிய கட்டுரையை 22-4 56 செங்கோல்' இதழில் பிரசுரித்தார்.

தமிழ்நாட்டில் — குறிப்பாக, சென்னை நகரில் இளங்கோவின் பெயரால் மன்றங்கள் தோற்றுவிக்கவும் முற்பட்டு அதிலேயும் ம. பொ சி. வெற்றிகண்டார்.

சென்னை நகரில் இளங்கோ கலைமன்றம் நிறுவி அதன் தலைவராக ஔவை தி க.சண்முகத்தையும், செயலாளராக திரு. ஏ. பி நாகராசனையும் நியமித்தார். இந்த மன்றம் தொடர்ந்து பல ஆண்டுகள் சித்ரா பௌர்ணமி நாளில் சென்னையில் இளங்கோ விழாவை நடத்தியது.

இந்த மன்றத்தின் சார்பில் சென்னை ஏ வி.எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் நடந்த முதல் விழாவிலே அப்போதைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அந்தவிழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்திய ஏ.பி. என், தமிழக அரசின் சார்பில் சென்னை கடற்கரையில் இளங்கோவின் சிலையை நிறுத்த முதல்வர் கலைஞருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

'ஏ பி என். கோரிக்கையானது ஐயா ம. பொ. சி. யிடமிருந்துதான் பிறந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும். இன்னும் சில வாரங்களில் சிலை திறப்பு விழா நடைபெறும் என்று முதல்வர் உறுதி கூறினார்

அதன்படி கடற்கரையிலுள்ள அண்ணா சமாதியின் நுழைவாயிலில் கவியரசர் கம்பர் சிலைக்கருகில் இளங்கோவின் சிலை நிறுத்தப்பட்டு, அதை முதல்வர் கலைஞரே திறந்துவைத்தார். சிலம்புச்செல்வர் ஐயா சிறப்புரையாற்றினார்.

ஐயா சிலப்புச்செல்வர் தம்முடைய சிலப்பதிகார பிரசாரப் பணிக்குத் துணை புரிவோரைப் பாராட்டிப் பேசி வருவதோடு, பரிசுகளும் வழங்கினார்.

பூம்புகாரில் சித்திரை முழுநிலவுநாளில் சிலப்பதிகார விழாவை தமிழக அரசு முதன் முதலாகக் கொண்டாடியதற்காக அதையடுத்து மயிலை கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற இளங்கோ விழாவில் பெரிய வெள்ளித் தட்டு ஒன்றை முதல்வர் கலைஞருக்கு பரிசளித்தார். அத்துடன், தாம் எழுதிய 'சிலப்பதிகாரத் திறனாய்வு' என்னும் நூலை முதல்வர் கலைஞருக்குக் காணிக்கையாக்கினார்.

இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரப் நடகக் காப்பியம் என்பது புலவர் பெருமக்களின் முடிவு அதனால், அவரது பெயரால் முதன்முதலில் எடுத்த விழாவில் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியாரைக் கொண்டு தொடங்கிவைக்கச் செய்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு.பி.டி ராசன் அவர்களைக் கொண்டு சிலப்பதிகார பதிப்பாசிரியர் மகாமகோபாத்யாய உ.வே.சாமிநாத ஐயரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசச் செய்தார். சிலப்பதிகாரத்தின் புகழையெல்லாம் தன் புகழாக்கிக் கொள்ள ஐயா விரும்பிதில்லை.

இந்த விழாவில் கவிஞர் வெ ராமலிங்கம் பிள்ளை பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோரையும் கலந்துகொள்ளச் செய்தார்.

(தொடரும்)

ஆங்கில நர்சரிபள்ளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கே பேசினால் தண்டிக்கப்படுகிறார்கள் ஆங்கிலத்தை அவர்கள் தவறுதலாகப் பேசினாலும் அக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு சந்தோஷம்.

ஆகவே, நர்சரி பள்ளிகளின் பிரச்னை ஒருபாதி பெற்றோர்களின் மனோபாவத்தைப் பற்றிய பிரச்சினை மறுபாதி கற்கின்ற குழந்தைகளின் கஷ்டங்களைப் பற்றிய பிரச்னை.

உண்மையில் நம்முடைய ஆரம்ப பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவை அபிவிருத்தி அடையவேண்டுமானால், அதற்கு முட்டுக் கட்டைகளாக இருப்பது எது? நர்சரி பள்ளிகள்தான்,

மாநிலத்திலுள்ள நர்சரி பள்ளிகள் அனைத்தையும் மூடிவிட வேண்டும் வள்ளுவர்சொன்னபடி நோய் நாடினால் போதாது; நோய் முதல் நாடவேண்டும். நோய்க்கான மூலகாரணம் எது? இந்த நர்சரிப்பள்ளிகள்தான் ஆகவேதான் அவைகள் மூடப்படவேண்டும் என்று அறிவுப் பூர்வமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் 20 ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன்.

ஒரு தலைமுறையினர் தாங்கள் பெற்றுத் தீரவேண்டிய அறிவையெல்லாம் இழக்கிறார்களேஎன்ற கவலைதான் இதற்குக்காரணம். அதன் மூலம் இந்த விஞ்ஞான நூற்றாண்டோடுஇவர்கள் சேர்ந்துவளராமல்வெகுதூரம்பின்தங்கி விடுகிறார்களே என்ற ஒருவித கோபம்தான் காரணம்.

ஒரு தேச மக்களை—அதுவும் சுதந்திரம் அடைந்த ஒரு தேச மக்களை—சுயசிந்தனை அற்றவர்களாக செய்வதைப் போன்ற பாவம் வேறு எதுவும் இல்லை. இந்தப் பாவம் பகிரங்கமாக பல ஆண்டுகளாக இங்கே செய்யப்படுகிறது,

'நர்சரி பள்ளிகள்' என்றால் என்ன?

இந்த நடைமுறையே வெளிநாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்ததாகும். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஆண், பெண்—கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்பவர்கள். அலுவலகத்திலிருந்து அவர்கள் திரும்பும்வரை தங்களுடைய பிள்ளைகளை காப்பகங்களில் விட்டுச் செல்வார்கள் அப்படித் தோன்றியவைதான் இந்த நர்சரி பள்ளிகள்.

ஆகவே இங்கிலீஷ் மீடியத்தில் உள்ள நமது நர்சரிபள்ளிகள் என்பபடுபவை அனைத்தும் தமிழ் நாட்டில் மூடப்படவேண்டும் விளையாட்டுப்பள்ளிகள்தான்—அதுவும் தாய்மொழி மூலமாகப் பயிற்றுவிக்கப்படும் குழந்தைப் பள்ளிகள்தான் அனுமதிக்கப்படவேண்டும். ஆரம்பப் பாடசாலைகளிலும் உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளிலும் தாய்மொழி மூலமாகவே கல்விபோதனை அமையவேண்டும். கைத்தொழில் பாடங்களும் ஷிப்ட் முறையும் இவற்றில் கட்டாயம் இடம் பெற்றாக வேண்டும்.

இவ்வாறெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுமானால் நமது குழந்தைகளின் சுயசிந்தனை வளர்ச்சி சுதந்திரமான சூழலில் அமோகமாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை,

செங்கோல்

சந்தா விவரம்

ஆயுள் சந்தா	ரூ. 250-00
ஆண்டுச் சந்தா	ரூ. 25-00
ஆறுமாதச்சந்தா	ரூ. 12-50
மூன்றுமாதச்சந்தா	ரூ 6-25
தனிப்பிரதி	காசுகள் 50

திருப்பதியில் காங்கிரஸ்

மகாசபையின் மாபெரும் வெற்றி!

[ம. பொ. சிவஞானம்]

இந்திய தேசிய காங்கிரஸ் 79ஆவது வருடாந்திர மகாசபை தெய்வத் தலமான திருப்பதியில் நடந்து முடிந்துவிட்டது. விடுதலைப் போராட்ட காலத்தில் அரசியல் கட்சிகளில் ஒன்றாக அல்லாமல், இந்தியரனைவருக்கும்பிரதிநிதித்துவமுடையதேசிய மகா சபையாகத்தான் தேச மக்களால் காங்கிரஸ் கருதப்பட்டது. தேசமக்கள் என்ன பிரிட்டிஷ் ஆட்சிகூட அப்படித்தான் கருதியது. அதனால், வருடந்தோறும் கூடும் பேரவையை மகாசபை என்றே சொல்வதுண்டு, ஆம்; மகாநாடு என்று சொல்லும் வழக்கமில்லை.

திருப்பதியில் கூடிய மகாசபையானது தற்போதைய பிரதமர் மாண்புமிகு பி.வி. நரசிம்மராவுக்கு எல்லாவகையிலும் வெற்றி தருவதாக அமைந்து விட்டது நரசிம்மராவ் தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட ஆந்திர மாநிலத்தவர். அதனால், தம் சொந்த மாநிலத்தில் அவரது செல்வாக்கு மேலும் வலுப்படவும் வளரவும் திருப்பதி மகாசபை பயன்பட்டிருக்கிறது. யாருக்கேனும் அல்லது எந்த கட்சிக்கேனும் திருப்பதி மகாசபையால் வலிமை குன்றியதென்றால் அது திரு, என்.டி ராமராவுக்கும், அவரது தலைமையில் இயங்கிவரும் தெலுங்கு தேசக் கட்சிக்கும் ஆகும். அந்தக் கட்சியின் வாழ்வு முடிவுக்கு வந்துவிட்டது என்று சொல்லலாம்.

1969 தோடு காங்கிரஸ் கமிட்டிகளுக்கு தீவிர உறுப்பினர்களைக் கொண்டு தேர்தல் நடத்துவது தடைப்பட்டிருந்தது.

நாட்டில் சனநாயகத்தை காப்பதிலும் வளர்ப்பதிலும் நல்ல தொண்டு புரிந்த பெருமை காங்கிரசுக்கு உண்டு. ஆம்; இந்தியாவுடன் சேர்ந்து விடுதலை பெற்ற நாடுகளோடு ஒப்பிடுமிடத்து சனநாயகநெறி வலிவோடும் பொலிவோடும் விளங்குகின்ற பெருமைக்கு காங்கிரஸ் தான் முதற்காரணமாகும். ஆனால், கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுகாலம் காங்கிரஸ் அமைப்பில் சனநாயகம் இருக்கவில்லை, அதனால், இரத்த சோகைபிடித்ததுபோல் காட்சியளித்தது.

நல்லவேளையாக; நரசிம்மராவ் காங்கிரஸ் தலைவராகவும் தேசத்தின் பிரதமராகவும் இருக்கின்ற காலத்திலே காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தேர்தல் நடத்தும் புனிதப் பணி தொடங்கிவிட்டது. தமிழ் நாட்டிலும் வேறு ஒன்றிரு மாநிலங்களிலும் தேர்தல்கள் நடைபெறவில்லை. பஞ்சாபிலும் காஷ்மீரிலும் காங்கிரஸ் கமிட்டிகளுக்கு தேர்தல் நடக்காததை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அமைதி நிலவும் தமிழகத்திலும் காங்கிரஸ் கமிட்டிகளுக்கு தேர்தல் நடைபெறாத நிலை இந்த ஆண்டிலும் நீடிக்கச் செய்தது திரு. பி வி. நரசிம்மராவின் பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்திய தாகும்.

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களைக் கொண்டு 21 பேர் உள்ள செயற்குழுவைத் தேர்ந்தெடுப்பது முன்பெல்லாம் வழக்கம். ஆனால், அதைக்கூட காங்கிரஸ் தலைவரே நியமனத்தின் மூலம் அமைப்பது 20 ஆண்டுகாலமாக வழக்கமாகி விட்டது

பி.வி நரசிம்மராவ் காலத்தில் அனைத்திந்திய காங்கிரஸ் உறுப்பினர்களைக் கொண்டு செயற்குழு அமைக்க முயற்சி எடுத்து அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார் ஆனால், சரிபாதி எண்ணிக்கையளவில்தான் தேர்தல் நடந்திருக்கிறது. எஞ்சியுள்ள சரிபாதியினரை காங்கிரஸ் தலைவர் நியமிப்பாரசம் இந்தக்குறைபாடு கூட இல்லாமல் செயற்குழுவுக்குரிய 20 பேரையும் தேர்ந்தெடுக்கச் செய்திருக்கலாம், செயற்குழுவில் சரிபாதியான 10 பேர்க்குரிய தேர்தல்களிலே தலைவர் செல்வாக்கு ஊடுருவ வில்லையென்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இதற்காக காங்கிரஸ் தலைவர் பாராட்டவும்படுகிறார். ஆனால் பத்திடங்களுக்கு 70 பேர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்தும் காங்கிரஸ் தலைவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களிலே பெரும்பாலோர் விலகிக்கொண்டனர். ஆனால், பிரதமர் மகன்மட்டும் விலகவில்லை தலைவர் மகனே அவரைப் புறக்கணித்து போட்டியில் புகுந்தார் என்பது தந்தைக்குப் பெருமை தருவதல்ல.

செயற்குழுவில் தமிழ்நாட்டாரில் ஒருவர் கூட இடம் பெறவில்லை மூன்று பேர் போட்டியிட்டிருந்தும் அவர்கள் அனைவருமே மண்ணைக் கவ்வினர். இதற்குரிய நியாயமான காரணம் செயற்குழு உறுப்பினர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை தமிழ்நாட்டுக்கு இல்லாமல் போனதாகும். மத்திய துணைமந்திரி ரங்கராசன் குமாரமங்கலமும் தோல்வியடைந்திருக்கிறார்

தமிழ் நாட்டவரான தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த திருமதி மரகதம் சந்திரசேகரும் போட்டியில் புகுந்து தோல்வியடைந்திருக்கிறார். இவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் தாழ்த்தப்பட்ட சாதிக்கும் பெண் இனத்துக்கும் பிரதிநிதியாக இருந்திருப்பார். காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் பார்லிமெண்டரி குழுவிலும் பல்லாண்டு காலம் பதவிவகித்தவர் தோற்று விட்டது ஆரோக்கியமான முடிவல்ல.

இன்னும் பத்து உறுப்பினர்களை காங்கிரஸ் தலைவரே நியமனம் செய்வார். அப்போது பெண் இனத்துக்கும் தாழ்த்தப்பட்ட சாதிக்கும் பிரதிநிதியாக திருமதி மரகதம் நியமிக்கப்பட சந்தர்ப்பம் இருக்கிறது

நேருஜி குடும்பத்தின் செல்வாக்கு அடியோடு அகன்றுவிட்ட நிலையில் கூடும் முதல் மகாசபை இதுதான் என்று சில நாளேடுகள் வருணித்திருக்கின்றன. மேடையிலே முன்னாள் பிரதமர்களான பண்டித ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தி. திரு. ராஜிவ் காந்தி ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆகவே, மூன்று தலைமுறைகளுக்குரியவர்கள் படங்கள் மேடையில் காட்சியளிக்கும்படி திருப்பதி மகாசபை நடந்திருக்கிறது.

மகாசபைத் தலைவரான திரு. நரசிம்மராவ் உள்பட மேடையில் பேசியவர்கள் நேருஜி குடும்பத்தை அடிக்கடி பிரஸ்தாபித்திருக்கின்றனர். 'அந்த மூவர் காட்டிய வழியிலிருந்து இன்றையகாங்கிரசார் விலகிச் செல்லவில்லை' என்றும் உறுதிகூறியிருக்கின்றனர். பொருளாதாரத்திலேயும் சரி; சர்வதேச அரசியலிலும் சரி: சமூகப் பிரச்சினையிலேயும் சரி; நேருஜி-இந்திராஜி—ராஜிவ்ஜி கட்டிய வரம்புக்குட்பட்டுத்தான் தமது ஆட்சி நடப்பதாக பிரதமர் சத்தியம் செய்து சொன்னார் தலைவரின்முன்னுரையிலும் முடிவுரையிலும் இந்த உறுதி மொழியைத் தர அவர் தவறவே இல்லை. நேருஜி குடும்பத்தின் முன்னாள் பிரதமர்களைச் சொல்லும்போது இன்றைய பிரதமரின் குரல் உரத்தும் ஓங்கியும் ஒலிக்கக் கண்டோம். கேட்டோம்! ஆகவே, 'நேருஜி குடும்பம் இன்றைய காங்கிரசில் மதிப்பற்றுப் போய் விட்டது' என்பது பொறாமையால் எழுந்ததாகும்.

திருப்பதி மகாசபை கூடுவதற்கு முன்னால் அந்தப் பகுதியிலே வன்முறையாளர்கள் சேட்டை நிகழக்கூடும்—என்று வதந்தி பிறந்தது. ஆம்; ஆந்திரத்திலே நக்சல்பாரிகள் ஊடுருவல்; தமிழகத்திலே ஈழத்துப் புலிகள் ஊடுருவல்; இந்தச் சூழலில் திருப்பதி மகாசபை கூடியதால் அச்சம் ஏற்பட்டது இயற்கை ஆனால், திருப்பதி வெங்கடேசப்பெருமாள் அப்படிப்பட்ட அசம்பாவிதம் எதுவும் நிகழாமல் காப்பாற்றி விட்டார்.

முன்னரே பிரார்த்தித்துக் கொண்டு அதை நிறைவேற்றுபவர் போலமகாசபைமுடிந்ததும் மேல் திருப்பதிக்குச் சென்று நேர்த்திக் கடன்செய்திருக்கிறார் காங்கிரஸ் தலைவர் பி வி நரசிம்மராவ்.

பொதுவாக, திருப்பதியில் கூடியது ஒருகட்சியின் மாநாடு அல்ல; இந்தியா முழுவதற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும்தேசிய காங்கிரஸ் மகாசபையே!

வாழ்க, காங்கிரஸ் மகாசபை

வெல்க, திரு. வி. பி. நரசிம்மராவின் தலைமை!

○

அமைதிப் பாதையிலே...

ம-பொ-சிசுற்றுலா

சித்திரைத் திருநாள்

15-4-92 புதனன்று மாலை கப்பற்கூடத் தொழிலாளர் வாரியக் குடியிருப்பில் துறைமுகம்—மற்று, கப்பற் கூட கல்வி அறக்கட்டளைப்பள்ளி வளாகத்தில் தமிழ்ப் புத்தாண்டு விழா நடைபெற்றது. சிலப்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு புத்தாண்டு வாழ்த்து கூறிப் பேசினர். திரு எம் வேலு தலைமை வகித்தார். 'மண்ணிலே ஒரு வெண்ணிலா' நாடகம் நடத்தப் பெற்றது.

தியாகிகள் மாநாடு

அகில இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் அமைப்பின் 5ஆவது மாநில மாநாடு 18-4-92 சனிக்கிழமை காலை தி.நகரிலுள்ள எம்.எல் எம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. சிலப்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

கருத்தரங்கு

முருகாலயம் அமைப்பின் 14ஆவது ஆண்டு விழாவை யொட்டி தியாகராய நகரிலுள்ள ஆனந்தம் கலியாண மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த் திரைப்பட மேம்பாட்டுத் திட்டக் கருத்தரங்கில் டாக்டர் ம. பொ. சி. கலந்து கொண்டு நிறைவுரையாற்றினார் திரு. பொன்.பரமகுரு தலைமை வகித்தார்.

ஏது தமிழாண்டு?

13-4-92 சென்னையில் தமிழ்ப் புத்தாண்டு விழாவில் பேசிய போது டாக்டர் ம. பொ. சி. கூறியது வருமாறு:

இன்று தமிழருக்கு புத்தாண்டு வாழ்த்துக் கூறிய தி.மு.க. தலைவர் என் அருமை நண்பர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதியவர்கள், 'தை தொடங்கி பங்குனியோடு முடியும் ஆண்டு முறைதான் தமிழருக்குரியது. புலவர்களாலெல்லாம் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஆனாலும், சித்திரை தொடங்கி பங்குனி முடியவுள்ள ஆங்கில ஆண்டிலும் வாழ்த்துக் கூறுவதிலே இரட்டை மகிழ்ச்சிதானே!' என்று சலிப்போடு கூறியிருக்கிறார்.

அரபு நாகரிகத்தோடு தொடர்புடைய ஆண்டு பிறக்குங்கால் இஸ்லாமியருக்கு வாழ்த்து கூறுவதிலே இந்த சலிப்பு சர்ச்சையும் காணோம் கிறிஸ்துவ நாகரிகத்தோடு தொடர்புடைய ஜனவரிதொடங்கி டிசம்பர் முடியவுள்ள ஆண்டுமுறையை வரவேற்பதிலும் அவருக்கு சலிப்பு இல்லையே!

கேள்வி? பதில்!

ம பெ சி பதிலளிக்கிறார்!

நி புண்ணியம்,
திருத்தணி.

தாங்கள் திருபதியில் கூடிய காங்கிரஸ் மகாசபைக்குப் போனதாகத் தெரியவில்லையே, காரணமென்ன?

நான் பிரதிநிதியாகச் செல்ல முடியாது. பார்வையாளராக மற்றொருவர் துணையுடன் செல்வதற்கு இரண்டு நுழைவுச் சீட்டுகளை தமிழ்நாடு காங்கிரஸ் அனுப்பிவைத்தது ஆனால். பார்த்து மகிழ தொலைக்காட்சி போதுமே!

தெ வடிவேலு, காட்பாடி.

அடுத்துவரும் குடியரசுத் தலைவர் யாராக இருப்பார்?

திரு. ஆர் வேங்கடராமன் அவர்களே குடியரசுத் தலைவர் பதவியில் நீடித்தால் மகிழ்ச்சியடைவேன் நபர் மாறுவாரானல், நிச்சயமாக இந்தி மொழியாளராக இருக்கமாட்டார். இந்தி மொழி மாநிலங்களை பாரதீய சனதா பிடித்துக்கொண்டுள்ளதே!

கு நாகலிங்கம், கொழும்பு.

புலிப்படைத் தலைவர் திரு பிரபாகரன் அவர்களை இலங்கை அரசின் உதவியோடு கைது செய்து இந்தியாவில் விசாரணை நடத்தி தண்டிக்கப்படுவதைத் தாங்கள் விரும்புகிறீர்களா?

என் தேசத் தலைவர் ராஜிவ் காந்தி கொலையில் திரு பிரபாகரனுக்குத் தொடர்பு கிடையாதென்பது விசாரணையில் வெளிபடுமானால், அதுதான் நான் விரும்புவது!

நடக்க இருப்பவை

26-4-92 ஞாயிறு: சென்னை—மாலை 6மணிக்கு இராயப் பேட்டை காதிகிராமோத யக் பவன் அரங்கில் ஔவை டி கே. சண்முகம் 80ஆவது பிறந்த நாள் விழாவும், கலைஞர் ஏ.பி.நாகராசன் திருவுருப்படத் திறப்பும்.

27-4-92 திங்கள்: சென்னை—மாலை 6மணிக்கு கிருஷ்ண சாமி அசோசியட்ட் சார்பில் டி.வி. நிலைய 'ஊரறிந்தரகசியம்' வெள்ளி விழா. ஆளுநர் மேதகு பீஷ்ம நாராயன் சிங் தலைமை.

6-4-92 புதன்: சென்னை—மாலை 6மணிக்கு வள்ளுவர்கோட்ட நெடுஞ்சாலையிலுள்ள எல், ஏ.பி திருமண மண்டபத்தில் திரு. பி.கே.சந்திரசேகரின் மகன் செல்வன் விசுவநாதன்—செல்வி சாந்திய திருமண வரவேற்பு,

11-5-92 திங்கள்: திருப்பூர்—பாரதி மன்றச் சார்பில் மகாகவி பாரதியார் விழா,

தந்தி . பெரியார்
தொலைபேசி எண்கள்: 33213
இல்லம்: 31922
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு & விற்பனை நிலையம்,
92, திருப்பரங்குன்றம் சாலை-மற்றும் கிளைகள்,
உரிமையாளர்: பே.தேவசகாயம்-மதுரை.

ஆசிரியர், வெளியிடுபவர் : டாக்டர் ம. பொ. சிவஞானம், 18 இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை—600005.
அச்சிடுபவர் : இ. வ. கிருஷ்ணன் ஒரு அச்சகம் 19, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை—600005 போன் : 844371